**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 548/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | லட்சுமணன், வயது 72 |
| Father Name/Husband Name | : | ராமசாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தினமலர் பேப்பர் ஏஜென்சி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of May 2023.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து தினமலர் பேப்பர் ஏஜென்சி வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும் எனது ஏஜென்சியில் பேப்பர் பண்டல் போட்டுக்கொண்டு பணத்தை வசூல் செய்து கொடுக்கும் பொறுப்பை கடந்த 2015–2021 வரை பார்த்தார்.
2. கடந்த 2020 பிப்ரவரி மாதம் எனக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. அப்போது எதிரி என்னிடம் இதற்கு முன் வேலைபார்த்த நிறுவனத்தில் ரூ.70000/– கடன் பெற்றிருந்ததாகவும் அவர்கள் நெருக்கடி கொடுப்பதாகவும் சொல்லி என்னிடம் பணம் கேட்டார்.
3. நான் அவருக்கு ரூ.70000/– கொடுத்தேன். இதற்கு முன் வேலை பார்த்த கம்பெனியில் இரும்பு வேலை செய்து வந்ததாக சொன்னார். மீண்டும் தான் தனியாக ஸ்டீல் வேலை செய்தவதாகவும் நீங்கள் முதலீடு செய்தால் அதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் உங்கள் கடனை அடைத்துவிடுவேன் என்று சொன்னார்.
4. அதற்கான நான் எதிரிக்கு ரூ.2,68,000/– ஐ கொடுத்தேன். என் மகள் படித்து முடித்த உடன் எனக்கு கடன் ஆகிவிட்டது. எனது மகள் 2020 ஆண்டு டிசம்பர் மாதம் ஏஜென்சியின் கணக்கு வழக்கு விவரங்களை எனது மகள் பார்க்கும் படி கூறினேன்.
5. அதனை பார்த்த உடன் எதிரி சரியாக வசூல் செய்து பணத்தை கொடுக்காமல் இருப்பது தெரியவந்தது. இது பற்றி எனது மகள் என்னிடம் கூறினார். நான் எதிரியை கூப்பிட்டு ஒவ்வொரு வீட்டிலும் வரவேண்டிய பாக்கியை எனது மகளை கூட்டிச்சென்று அவர்கள் வைத்திருந்த பாக்கி தொகையை எனது மகளிடம்

கொடுக்க சொல்லி எதிரியுடன் அனுப்பி வைத்தேன்.

6. அப்போது பேப்பர் போடும் வீடுகளுக்கு எதிரியுடன் எனது மகள் போகும் போது அந்த வீட்டின் அருகே சென்ற உடன் ஏற்கனவே இந்த வீட்டில் பணம் வாங்கிவிட்டேன் என்றும் அவர்கள் பணம் தரவேண்டியது இல்லை என்றும் சுமார் 50 வீடுகளுக்கும் இவ்வாறு சொல்லியுள்ளார்.
7. பின்னர் மாலை எதிரியை கடைக்கு வரச்சொல்லி எந்தெந்த வீடுகளில் எவ்வளவு வாங்கியுள்ளாய் என்பதை அவரை எழுதச்சொல்லி கேட்டேன் அவரே கைப்பட எழுதிக்கொடுத்தார். அதில் ரூ.3,30,000/- அவர் வசூல் பிரித்து அவரே வைத்துக்கொண்டதாக தெரியவந்தது.
8. நான் இது பற்றி அவரிடம் கேட்ட போது அவர் வேலை பார்த்து சிறிது சிறிதாக கடன்களை அடைத்து விடுவதாக கூறினார். கொஞ்ச நாள் கழித்து நான் அவரது மாதச்சம்பளத்தில் 1000, 500 என்று பிடித்துக்கொள்வேன் அதனை அவரும் டைரியில் குறித்துக்கொள்வார்.
9. கடந்த 2021 ஆண்டு அக்டோபர் மாதம் தான் பேப்பர் போடும் வேலைக்கு வரமுடியாது என்று சொல்லி கடைக்கு வரவில்லை. பின்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் படி கிழக்கு காவல்நிலையம் சென்று புகார் மனு அளித்தேன். அவர்கள் எதிரியை கூப்பிட்டு விசாரித்ததில் எதிரியும் ரூ.5,98,000/- தரவேண்டி உள்ளதாக ஒப்புக்கொண்டார்.
10. காவல்நிலைய உதவி ஆய்வாளர் எதிரி வேலை பார்த்த வகைக்கு பணத்தை கழிக்கச்சொன்தன் பேரில் ரூ.80,000/- கழித்து மீதி ரூ.5,18,000/- ஐ இரண்டு தவணைகளாக ஒரு வருடத்தில் தருவதாக ஒப்புக்கொண்டார். காவல்நிலையத்தில் எதிரி ஒரு முறை ரூ.30,000/- மற்றொரு முறை ரூ.15,000/- கொடுத்தார்.
11. பின்னர் இரண்டு மூன்று மாதங்கள் அவர் பணம் தரவில்லை அது குறித்து எதிரியிடம் கேட்ட போது எதிரி என்னிடம் பணம் இல்லை தரமுடியாது என்று கூறிவிட்டார். அதன் பின்னர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. உங்களுக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னீர்கள் என்றால் சரிதான். நீங்கள் கிராம புறத்தில் தினமலர் பேப்பர் போடுவதற்கு ஏஜென்சி எடுத்துள்ளீர்கள்

என்றால் கிராமம் மற்றும் நகரபகுதிகளும் வரும். நீங்கள் ஏஜென்சி எடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் போலிசாரிடம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. ஏஜென்சி எடுத்ததற்கான ஆவணமும் தினமலர் அலுவலகத்தில் கொடுப்பார்கள் என்றால் இல்லை.

2. புதுகிராமத்தினை சேர்ந்த ராமசுப்பு என்பவரும் கோவில்பட்டி நகரத்திற்கான தினமலர் ஏஜென்ட் எடுத்துள்ளார் என்றால் சரிதான். சம்பவத்தின் அவருடைய அலுவலகம் எங்கிருந்தது என்றால் இல்லை. கோவில்பட்டி புதுரோட்டில் உள்ள செந்தில் சைக்கிள் மார்க் பக்கத்தில் தினமலர் ஏஜென்சி வைத்திருந்தீர்கள் என்றால் எனது அப்பா வைத்திருந்தார்.
3. அதன் பிறகு நீங்கள் இரயில்வே ஸ்டேஷன் இந்திரா காம்பிளக்சில் ஏஜென்சி வைத்தீர்கள் என்றால் சரிதான். எத்தனை பேர் பேப்பர் போடுவார்கள் என்றால் 5 பேர். அவர்களுக்கு மாதச்சம்பளம் என்ன என்றால் ஒவ்வொருமாதிரியாக சம்பளம் போடப்படும். பேப்பர் மட்டும் போடுபவர்களுக்கு மாதம் ரூ.2000/- எதிரிக்கு ரூ.12000/- கொடுத்தேன்.
4. அன்றாட வரவு செலவுகளை பராமரிக்க தினப்பதிவேடுகள் கடையில் இருக்கும் என்றால் இல்லை. சம்பளம் கொடுக்கும் போது ரசீது போட்டு கொடுப்பீர்களா என்றால் ரசீது கொடுக்கமாட்டோம். 18.10.2021 ஆம் தேதி தான் எதிரிமீது நடவடிக்கை எடுக்க கோரி நீதிமன்றத்தில் புகார் கொடுத்தீர்கள் என்றால் சரிதான்.
5. அதில் சம்பவம் பிப்ரவரி 2020 ல் நடந்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களிடம் பேப்பர் வாங்குபவர்களுக்கு ரசீது கொடுப்பீர்கள் என்றால் சரிதான். அதன் அடிக்கட்டை உங்களிடம் இருக்கும் என்றால் இல்லை நேரடி ரசீதுகள் தான் கொடுப்போம்.
6. உங்களது மாத வருமானம் எவ்வளவு என்றால் சம்பளம் போட்டது போக ரூ.10000/-. உங்கள் ஏஜென்சியில் எத்தனை வாடிக்கையாளர்கள் இருந்தார்கள் என்றால் 1100 பேர். வருமான வரி செலுத்துவீர்களா என்றால் இல்லை. நியூஸ் ஏஜென்சிக்கு கிடையாது. ரம்யா என்பது யார் என்றால் எனது மகள்.
7. சிவசைலம் என்பவர் யார் என்றால் எனது ஏஜென்சியில் பேப்பர் போடும் பையன். நீங்கள் எதிரிக்கு ரூ.70000/- கொடுத்ததற்கு எழுத்து பூர்மாக எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரி உங்களிடம் ரூ.2,68,000/- பணத்தை வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் போலிசாரிடமோ நீதிமன்றத்திலோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.
8. நீங்கள் புகார் மனுவில் உங்கள் மகளை அழைத்துக்கொண்டு விசாரிக்கும் போது எதிரி ரூ.2,60,000/- கையாடல் செய்ததாக ஒப்புக்கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 03.12.2020 ஆம் தேதி மேற்படி விவரங்களை எதிரி கைப்பட

எழுதிக்கொடுத்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. உண்மையில் உங்களுக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் எதிரி தனியாக தொழில் செய்ய முடிவு செய்து உங்கள் ஏஜென்சியில் இருந்து விலகிக்கொண்டதால் அவர் மீது பொய்யாக இந்த புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

9. எதிரி மீது கோவில்பட்டி கிழக்கு காவல்நிலையத்தில் நீங்கள் கொடுத்த புகார் மனுவில் உண்மை இருந்திருந்தால் அவர்கள் உங்கள் புகார் மனுவை விசாரித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மை தம்மை இல்லாத காரணத்தினால் தான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.